திருப்பூர் கூட்டுறவு வீட்டு வசதி சங்கம் லிட், No K1917
138 A, குமரன் சாலை , ஜெமினி பிரஸ் பில்டிங்,
திருப்பூர்- 641 601.
போன் 0421 - 2200490, 2200590

# ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

திருப்பூர் கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்தால் நடத்தப்படும் திருப்பூர் குமரன் மகளிர் கல்லூரியில் முதல் தளத்தில் வகுப்பறைகள் மற்றும் நூலகக் கட்டிடம் கட்டுவதற்கு தகுதி வாய்ந்த மற்றும் இதே பணிகளில் முன் அனுபவம் உள்ள ஒப்பந்ததாரர்களிடம் இருந்து ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்ட விதிகளின் படி தனி அலுவலர் அவர்களால் வரவேற்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | வேலையின் மதிப்பு | டேவணித் தொகை | ஒப்பந்தப்புள்ளி படிவ விலை (திருப்பித் தரப்பட மாட்டாது) | பணி முடிக்கும் காலம் | தகுதி |
|---|---|---|---|---|---|---|
| 1 | திருப்பூர் குமரன் மகளிர் கல்லூரியில் முதல் தளத்தில் வகுப்பறைகள் மற்றும் நூலகக் கட்டிடம் கட்டும் பணி. | ரூ.1,00,00,000/- | ரூ.1,00,000/- | ரூ.15,000+ 4%Vat Tax | 6 மாதங்கள் | முதல் வகுப்பு |

<u>நிபந்தனைகள்</u>

1. ஒப்பந்தப்புள்ளி படிவம் வேண்டுவோர் பொதுப்பணித்துறையில் முதல் வகுப்பில் பதிவு செய்த சான்றிதழ், முன்அனுபவச் சான்று, விற்பனை வரி நிலுவையில்லை சான்று மற்றும் ஒரே ஒப்பந்தத்தில் கடந்த மூன்றாண்டுக்குள் ஒரு கோடிக்கு மேல் கட்டிட பணி முடித்ததற்கான சான்று இணைக்கப்படவேண்டும்.

2. ஒப்பந்தப்புள்ளி படிவத்திற்கான தொகையை ரொக்கமாக சங்கத்தில் செலுத்தி ஒப்பந்தப்புள்ளி படிவங்களை பெற்றுக்கொள்ளலாம்.

3. ஒப்பந்தப்புள்ளியுடன் டேவணித்தொகைக்கு உரிய தொகையை தனி அலுவலர், திருப்பூர் கூட்டுறவு வீட்டு வசதி சங்கம் பெயரில் கேட்பு வரைவோலை மூலம் இணைத்து வழங்கவேண்டும்.

4. ஒப்பந்தப்புள்ளி படிவங்களை சங்க அலுவலக நேரத்தில் 14.12.2009 மதியம் 1.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

5. ஒப்பந்தப்புள்ளி டேவணித்தொகையுடன் சங்கத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கடைசி நாள் 14.12.2009 மதியம் 1.00 மணி வரை.

6. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள், ஒப்பந்தங்கள் ஒப்பந்ததாரர்களின் அல்லது அவரது முகவர்களின் முன்னிலையில் 14.12.2009 அன்று மாலை 3.00 மணிக்கு திறக்கப்படும்

7. மேலே குறிப்பிட்ட ஒப்பந்தப்புள்ளி பெறுவதற்கான தேதி ஏதேனும் ஒரு காரணத்தை முன்னிட்டு அரசின் விடுமுறை தினமாக அறிவிக்கப்படுமாயின் ஒப்பந்தப்புள்ளிகள் அதற்கு அடுத்த அலுவலக தினத்தன்று அதே நேரத்தில் பெற்றுக்கொள்ளப்பட்டுத் திறக்கப்படும்.

8. ஒப்பந்தப்புள்ளி படிவத்தினை (Tender Schedule) திருப்பூர் குமரன் மகளிர் கல்லூரி இணையதளமான www.tkcfw.ac.in முலமாகவும் பதிவிறக்கம் செய்து விண்ணப்பிக்கலாம்.

9. பெறப்பட்ட எல்லா ஒப்பந்தப்புள்ளிகளையோ அல்லது குறிப்பிட்ட ஒப்பந்தப்புள்ளிகளையோ ஏற்றுக்கொள்வதற்கும் அல்லது தள்ளுபடி செய்வதற்கும் அல்லது ரத்து செய்வதற்கும் சங்க தனி அலுவலர்க்கு முழு அதிகாரம் உண்டு.

பிற விவரங்களுக்கு திருப்பூர் கூட்டுறவு வீட்டு வசதி சங்க அலுவலகத்தில் அலுவலகநேரங்களில் தொடர்பு கொள்ளவும்.

(ஒம்) தனி அலுவலர்
திருப்பூர் கூட்டுறவு வீட்டு வசதி சங்கம்